நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்

ஆணை பிறப்பிப்பவர் :- திரு.ப.தங்கவேலு,.பி.எஸ்.சி,.பி.எட்,.

ந.க.எண்.நி3/12025/2023
நாள். 24.01.2024

திருவள்ளுவராண்டு –2055
சோபகிருது, தை.10

பொருள்:- பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – நாமக்கல் மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளின் தொகுதி IV – இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போட்டித் தேர்வின் மூலம் பணிநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டது – பணிநியமனம் அளிக்கப்பட்டது – பணியில் சேர்ந்துகொண்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்க :-

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.1855/பிஎஸ்டி–டி1/2023, நாள்–22.08.2023
2 நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். நி3/12025/2023, நாள். 08.09.2023
3 தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

❖❖❖

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்டபடி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வின் தொகுதி நான்கில், தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின்விதிகளின்கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு 24.07.2022 அன்று நடத்தப்பட்ட போட்டித்தேர்வின்வழி தெரிவு செய்யப்பட்டதின்பேரில், மேலே இரண்டில் படிக்கப்பட்டபடி, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கெதிரே கலம் (4)இல் கண்டுள்ள நாளில்

/2/

பணியினை வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் விதி 32(a)((I) இன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண்பருவகாலத்தினை துவக்கியும் இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஜி.நிவாஸ்,<br>இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், மல்லசமுத்திரம் | 11.09.2023 மு.ப,. | 11.09.2023 மு.ப,. |
| 2. | ப்பி.கோமதி,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,<br>நாமக்கல் | 11.09.2023 மு.ப,. | 11.09.2023 மு.ப,. |
| 3. | ஆர்.கோமதி,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2),<br>(அலுவலக நிலை)<br>பரமத்தி வட்டாரம் | 11.09.2023 மு.ப,. | 11.09.2023 மு.ப,. |
| 4. | கே.மேகலா,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2),<br>(அலுவலக நிலை)<br>மல்லசமுத்திரம் வட்டாரம் | 13.09.2023 மு.ப,. | 13.09.2023 மு.ப,. |
| 5. | வி.பிரியா,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2),<br>(கள நிலை)<br>நாமகிரிப்பேட்டை வட்டாரம். | 13.09.2023 மு.ப,. | 13.09.2023 மு.ப,. |
| 6. | எஸ்.பல்கீஸ்,<br>ஊர்நல அலுவலர் (நிலை-2),<br>(அலுவலக நிலை)<br>எலச்சிபாளையம் வட்டாரம். | 11.09.2023 மு.ப,. | 11.09.2023 மு.ப,. |
| 7. | டி.செந்தில் குமார்,<br>காசாளர், ஊராட்சி ஒன்றியம்,<br>மோகனூர் | 12.09.2023 மு.ப,. | 12.09.2023 மு.ப,. |

<u>நிபந்தனை</u>

இவ்வாணையானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வின் தொகுதி நான்கில் அடங்கிய, தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ் அடங்கிய இளநிலை உதவியளார்

பதவிக்கான பணிநாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டதாகும்.

2)இவர்கள். தங்களது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள்.02.03.2017 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சிபெற வேண்டும்.

| வ.எண் | தாள் குறியீடு எண் | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchayatraj Department – Tamilnadu Panchayat Act, 1994 & Rules and Constitution of India |
| 2. | 166 | The Panchayat Development Account Test |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchayatraj Department – Scheme Administration |
| 4. | 172 | The Tamilnadu Government office Mannual Test. |

3) பணியாளர்களின் வரிசை எண்ணானது அவர்களது பணிமூப்பினை குறிப்பதன்று என தெரிவிக்கப்படுவதுடன் இவ்வாணை குறித்த விவரத்தினை தொடர்புடைய இளநிலை உதவியாளர்களின் பணிப்பதிவேடுகளில் பதிந்து, அதன் விவரத்தினை (பணிப்பதிவேடு தொகுதி மற்றும் பக்க எண் விவரங்களை உள்ளடக்கி) பணிப்பதிவேட்டின் நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள்(வ.ஊ/ கி.ஊ) க்கு தெரிவிக்கப்படுகிறது.

24.07.2024

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), நாமக்கல்

/4/

**பெறுநர்**

தொடர்புடைய பணியாளர்கள் (அலுவலகம் வழியாக)

**நகல்**

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், நாமக்கல்
2. தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள்(வ.ஊ/கி.ஊ) மல்லசமுத்திரம், பரமத்தி, நாமகிரிப்பேட்டை, எலச்சிபாளையம் மற்றும் மோகனூர்.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.